Subscription

Inland : Rs. 100/-
*For Advertisements*

Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

*Established : 1841: A Christian Weekly: Published Every Friday*

**Vol:- 151 Jaffna, Friday 11 January 1991 No: 2**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

## APPRECIATION

**Dr. Winfed Selvam Nathaniel**

To a committed christian death holds no fear. To be absent from the body is to be present with the Lord. This truism is well exemplified in the sweet and peaceful demise of Dr. Nathaniel at the ripe age of ninety five.

It was his birthday too. Those present with him were his loved ones — his beloved wife, his two darling children Vimala and Rajan and his pet niece Inpam from Canada. All pleasantries were duly exchanged; all presents and kisses were roundly given and gratefully accepted. The birthday breakfast was almost over. The trumpet call came and in the twinkling of an eye, he was gone into the welcome hands of Jesus and eternity. God had perfected him and qualified him to be a partner of the inheritance of the saints above.

Dr. Nathaniel was the youngest son of very religious parents - the late Rev. and Mrs. W. P. S. Nathaniel of Manipay. He had his higher education at St. Thomas College, Mount Lavinia and completed his medical course at the Ceylon Medical College, Colombo.

He started as a private practitioner at Point Pedro. His magnetic personality his winsome ways, his sweet bedside manners and above all his impeccable skill at diagnosis and treatment secured for him a very lucrative practice.

He hailed from a top - rung christian family and married into a family of equal status and piety - the Jesuthasans of Anaicoddai. His bride Grace was a charming and well accomplished lady with a wide range of talents. Together they built up a christian home par excellence where the milk of human kindness, generosity and hospitality knew no bounds.

He next ventured into Government service and worked in many parts of the Island, maintaining his name and fame as a medical hand of repute. He terminated this service at retirement from Gampola. He won the raspect and liking of both the patients and the general public. He loved social life and was a good mixer. His administration was both honest and impartial. He was an official of the Ceylon Cancer Society

He next set up a very successful private practice at Nawalapitiya, maintaining his high standard of efficiency. He was deeply service centered. His parents clung to him with a deep sense of gratitude. This period of service went on for sixteen years.

Next he turned his attention to his home town Anaicoddai. While continuing with his medical service, he also identified himself with the public in social, religious and welfare matters. He was a live wire of the Lions Club of Jaffna. He won the esteem and regard of all.

He was almost a consecrated churchman. He was in the forefront of christian activities. He never discriminated on the ground of denominations.

During that black period in Jaffna when bombs, shells and mortars were the order of the day, people dreaded sleeping in their own houses. They sought shelter at the Nathaniel home at Anaicoddai. It was a haven of rest for them. They were all well received and well treated on humanitarian grounds. The Nathaniels revelled in treating people. It was their forte.

Longevity is a gift from God to those who kept faith with Him and served Him well. Dr. Nathaniel was doubly blessed in that he had a long lease of life and also celebrated his sixty second anniversary of his happy wedlock.

He leaves behind his wife, his two children, his son - in - law Professor Eric Aiyadurai, his two grandsons Sathiyan and Gerry and a host of relatives and friends to bemoan his loss.

Manipay P. R. A.

In Loving Memory of

**Dr. Joseph Samuel Navaratnam**

( died 15 - 1 - 90 )

Always remembered and

Sadly Missed

**By your loving wife**

LEELA and daughter
**Santhini**

## 175th Anniversary of the A. C. M.

### An Evening Walk at Uduvil

**Rev. Miron Winslow**

April — 1 — 1 — 1823

Spent the day in company with Brother Spaulding in visiting the remotest parts of Manepay and Oodoovile, and the region between us and Jaffna which we had not before thouroughly explored.

We found the population large, and though so nearly within the sound of the Gospel the people generally were very ignorant.

At length came to the house of one of the richest natives in that part near Jaffna, and formerly the head man of the parish. He treated me with the greatest politeness, and offered any thing his house afforded, for my refreshment. In conversation he professed to have renounced healthenism, and to be a pure deist. He said, "there is one God and every thing is a part of him; and that by good deeds alone we can go to heaven". When I attempted to open to him the true plan of salvation, he said, I have long wished to see some of the missionaries, and talk with them, as I am convinced that Idol worship is absurd. Throughout the whole time, he treated me very kindly and appeared to receive well all that I said.

As the day was sinking in the west, I took in company with brother Spaulding the road to Manepay, which winds along by the side of extensive paddy fields on the one side, and the villages which we have been visiting on the other. The sea on our right, on which the last rays of the sun were glimmering, was in view, for about two miles: and we enjoyed our weary walk, conversing more on the moral than on the natural scenery arround us. Not because it was more cheering — Alas! darkness covers the earth, and gross darkness the people

## THE NEW ARCHBISHOP OF CANTERBURY

### " A RARITY AMONG BISHOPS "

**BY JOHN HARRIOTT**

(continued from last issue)

In other ways, too, he is difficult to stereotype. Rather rarely among bishops, he has spoken up eloquently on 'green' issues, which he believes to be very much part of the Church's mission, and where he believes fundamental changes in public attitudes require serious theological underpinning and spiritual change of heart.

Even more striking is his attitude towards the role of women in the Church. This goes beyond his unequivocal championing of the ordination of women, important though that is in itself, and already the cause of serious controversy with some of his own diocesan clergy. He has been keenly and intelligently attentive to the problems felt by women in the Church, profoundly sympathetic to their sense of exclusion and hurt, and anxious to find remedies as well as to offer encouragement. Here, on his past record, he could prove to be an outstanding trail blazer.

Thirdly he has shown himself unusually sympathetic to charismatics, whom many Anglicans consider offensive to, or at least out of harmony with, the cool temper of Anglican spirituality.

While emphasizing the Church's primary role of communicating the truths of faith in word and deed, of developing the spiritual life of its members and of being a moral guide,

(Continued on page 4)

## CHRISTIAN THEOLOGICAL SEMINARY CHUNNAKAM

Applications are invited to the Year One classes leading to the Three Year Diploma Course of the Seminary. Minimum qualifications are six passes in the G. C. E. (O. L) and the candidate should have completed twenty years of age. Students with A/L qualifications may seek registration for the External Diplomas of the University of Serampore. Other details and application forms may be obtained from the Registrar's Office. Applications close on the 28th of February, 1991.

**A. Kadirgamar**
Registrar

# உதயதாரகை

Estd. 1841.

மலர் 151 11 - 1 - 91 இதழ் 2


## கிறிஸ்து பிறந்த திருநாளுக்கு அடுத்த நான்காம் ஞாயிறு

### ஞாயிறு 20-1-1991

### கிறிஸ்தவ ஒருமை ஞாயிறு

எரே 33: 6 - 9, எபே 4: 1-6, யோவான் 17: 11–23

இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் வரலாற்றில் கவலைக்குரிய பிரிவினைக்கு இடம் கொடுத்ததின் நிமித்தம் இராச்சியம் இரண்டாகப் பிரிந்து வடக்கே இஸ்ரவேல் இராச்சியமாகவும், தெற்கே யூதா இராச்சியமாகவும் பிளவுண்டு போயின. இப்பிரிவினையே அவர்களின் சிறையிருப்புக்கும் காரணமானது. அவர்களின் பிரிவினை, சிறையிருப்புக்கும் கடவுளுக்கு விரோதமாகச் செய்த அவர்கள் குற்றங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் ஒரு நேரிய தொடர்பு உண்டு என்பதே தீர்க்கதரிசியின் விளக்கம். எனவே அவர்கள் மறுபடியும் விடுதலை பெற்று ஒன்றாய் இணைந்து இருக்க வேண்டுமெனில் அவர்கள் எல்லா அக்கிரமங்களுக்கும் நீக்கலாக்கப்பட்டு மன்னிப்பைப் பெற வேண்டும். இதையே ஒரு நற்செய்தியாக எரேமியா தீர்க்கதரிசி 33:8 ல் குறிப்பிடுகிறார். அப்படி மன்னிக்கப்பட்டு விடுதலை பெறும் கால் இஸ்ரவேலும் யூதேயாவும் மறுபடியும் முன்னிருந்தது போல் ஒன்றாகக் கட்டப்படுவார்கள். (எரே 33:7) அவர்களுக்கூடாகக் கடவுளின் நாமமே எல்லா சாதிகளுக்கும் முன்பாக மகிமையாயுமிருக்கும் (எரே 33:9).

புதிய ஏற்பாடு, கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள் (கலா 3:27-28) என்றும், ''புது சிருஷ்டியாக, கடவுளுடைய இஸ்ரவேலென்றும்'' (கலா 6:15-16) சாட்சி பகருகிறது. கடவுளுடைய மக்களாக, கடவுளுடைய இஸ்ரவேலாக, அவருடைய திருச்சபையாக, திருச்சபையின் இலட்சியமும் அதன் ஒருமையே. ''ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே கடவுளும் பிதாவும் உண்டு'' (எபே 4:5-6) எனவே திருச்சபையானது 'அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்'' (எபே 4:2-3).

கடவுளின் சித்தம் சபையில் ஒருமையாயிருந்தபொழுதும் மனிதனின் பாவத்திற்கூடாகவே திருச்சபை வரலாற்றில் பிளவுகள் ஏற்பட்டு பல சபைகளாக ஒரே கர்த்தர், ஒரே ஞானஸ்நானம், ஒரே விசுவாசம் என்பதை மறைக்கும் அளவுக்கு பிரிந்திருக்கின்றன. பிரிவுண்ட சபைகளுக்கே சபையின் ஆண்டவர் ஒருமையின் சவாலை இன்று திரும்பவும் விடுக்கிறார். சபையின் ஒருமைக்கூடாகவே உலகம் கடவுளின் நற்செய்தியை அறிகிறது (யோ 17:23) எனவே எங்கள் பிரிவினைகளே நற்செய்தியை மறைக்கும் செயலாயிருக்கிறது என்பதை உணர்ந்து கிறிஸ்தவர்களாகிய நாம் ஒப்புரவாக்குதலுக்கூடாக ஒருமையை அடைய மனம் திரும்பி ஒன்றிணைய அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்து இயேசுவுக் கூடாக கடவுள் நிறைவேற்றின. இரட்சிப்பின் செயலுக்கும், திருச்சபையின் ஒருமைக்கும், உலக ஒருமை உலக சமாதானத்திற்கும் ஓர் நெருங்கிய தொடர்பு உண்டு. ''நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்'' என்று நமது ஆண்டவர் இயேசு தன் சிலுவை மரணத்தைக் குறித்தே சாட்சி பகர்ந்தார். (யோ 12 : 32 33) இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலினால் அவருடைய இரட்சிப்பை அனுபவித்தவர்களே, அவருடைய சரீரமாகிய திருச்சபையாக சேர்க்கப்பட்டு உலகத்தின் மக்கள் அனைவரையும் கிறிஸ்துவின் ஆட்சிக்குள் சேர்த்துக் கொள்வதற்கு கருவிகளாக இயங்குகிறார்கள். இதே உண்மையை தூய பவுல் அடிகளும் 2 கொரி 5:18ல் வற்புறுத்துகிறார். கடவுள் ''இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்'' திருச்சபையின் ஐக்கியம் அல்லது ஒருமைக்கும் உலக மக்கள் அனைவரதும் ஒருமைக்கும் ஓர் நேரிய தொடர்புண்டு. நடுக்குளத்தில் எறியப்பட்ட கல்லினால் தோன்றும் சிறு அலைகள் படர்ந்து படர்ந்து குளக்கரை வரையும் போய்ச் சேர்வது போல். இயேசுவின் சிலுவை மரணத்தினால் நிறைவேற்றப்பட்ட இரட்சிப்பும், ஒப்புரவாக்குதலும், எருசலேம், யூதேயா சமாரியா, உலகத்தின் கடைசி பரியந்தமும், திருச்சபைக் கூடாக பரந்து கிரியை செய்கிறது. திருச்சபையின் பிளவுகள் கடவுளுடைய சித்தத்திற்கே மாறானவை என்பதை உணர்ந்து கடவுளுடைய சித்தத்திற்கமைந்த ஒருமையை நாடி செயற்படுவதே சபைகளுக்கு இக்காலத்தில் கொடுக்கப்படும் சவாலாக இருக்கிறது.

### சுருக்க ஜெபம்

கடவுளே மனுக்குலமனைத்தும் படைத்த தந்தையே, உமது திருநாமத்தை அறிக்கையிடுவதில் பல்வேறு மக்களை உமது தூய ஆவியால் ஒன்றாக்கியிருக்கிறீர். அவர்கள் யாவரும் அந்த ஆவியின் ஏவுதலால் நம்பிக்கையில் ஒரே மனதும், நீதியில் ஒரே நாட்டமும் உடையோராய் உலகனைத்திலும் சிறந்து விளங்க அருள் புரியும். எங்கள் ஆண்டவர் இயேசுவின் பொருட்டுப் பணிவாய்க் கேட்கிறோம்.

ஆமென்

''திருமறைத் தொண்டன்''

### அன்னை

## தெரேஸா அம்மையார்

கிறிஸ்துவின் அன்புக்கு ஒரு விளக்கமாய் அமைந்த அன்னை தெரேசாவின் வாழ்க்கை. அன்புச் செயல்கள் நிறைந்த வாழ்க்கையாகவே அமைந்துள்ளது. குப்பைத் தொட்டியில் எவரும் தேடாத ஒரு குழந்தை கிடக்கிறது. இக் குழந்தையின் தாய் - உல்லாச வாழ்க்கையில் மயங்கிப் போகத் தகாத இடங்களுக்கும் போய் வந்ததின் விளைவு இது. தந்தை யாரோ? மனதைக் கல்லாக்கிக் கொண்டு தான் பெற்றெடுத்த குழந்தையைக் குப்பைத் தொட்டியில் எறிந்து விடுகிறாள்.

பசியால் வாடி, பனியில் வதங்கிக் குற்றுயிராகக் கிடக்கிறது அந்தப் பச்சிளங் குழந்தை. கண்டவுடன் வாரியணைக்கிறார் அன்னை தெரேசா. 'உயிர் இருக்கிறது. உயிர் புனிதமானது. இறைவனுடைய குழந்தை'! என்று கூறி அன்பைப் பொழிகிறார் அன்னை. மற்றொரு காட்சி; உள்ளத்தை உருக்குகிறது. கல்கத்தா வீதியொன்றில் குற்றுயிராய்க் கிடக்கிறாள் ஒரு கிழவி; எந்தவித அசைவுமில்லை. எலிகளுக்கும், எறும்புகளுக்கும் உணவாகிக் கொண்டிருக்கிறாள். மெள்ள மெள்ள இறந்து கொண்டிருக்கிறாள். அருகில் ஒருவருமில்லை. இறந்தபின் தூக்கிப் போட வேண்டியது குப்பை அள்ளும் லொறியாளர்களின் கடமை. இவளின் நிலையைக் கண்ட வழிப்போக்கர், 'ஐயோ பாவம், காணச் சகிக்கவில்லை. இக்கிழவியைக் கவனிப்பார் ஒருவரும் இல்லையா?' என முணுமுணுத்த வண்ணம், முகத்தை மூடிக்கொண்டு அப்பால் சென்று விடுகின்றனர்.

அன்னை வருகிறார், அன்பு கனிந்த பார்வை! சிழோடும், அதில் நெளிந்தோடும் புழுவோடும் அந்தக் கிழவியை அன்புடன் வாரி எடுக்கிறார். மரணத் தறுவாயில் இருப்பவர்களுக்காக அமைக்கப்பட்ட அறைக்குள் கொண்டு போய்ச் சேர்க்கிறார். அது அவசியந்தானா? என்று சிலர் எண்ணலாம். இது அவசியந்தான். ஒருவருக்கும் வேண்டாமென்று ஒதுக்கப்பட்டவள், அன்பை ஒருநாளும் அனுபவித்தறியாதவள், அன்பின் அரவணைப்பில், அன்பு கனிந்த முகம் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்க, நிம்மதியுடன் கண்களை மூட வேண்டும், என்கிறார் அன்னை தெரேசா.

இது அன்னையின் அன்றாட வேலை. ''நாம் செய்யவேண்டியது சமூக சேவையன்று, கிறிஸ்துவின் அன்புப்பணி. ஏதோ ஒரு மனிதனுக்குச் செய்யும் பணியன்று இது. அந்த மனிதனில் இயேசுவைக் கண்டு, அவருக்குச் செய்யும் திருப்பணி இது'' என்கிறார் தெரேசா அம்மையார். அவர் நிறுவிய ''அன்பின் திருப்பணியாளர்'' நிறுவனங்கள் உலகெங்கிலும் நிறுவப்பட்டுள்ளன. முதல் நிறுவனம் கல்கத்தாவில் நிறுவப்பட்டது.

இந்த நிறுவனத்தில் நடக்கும் பணிகளைத் தொலைக்காட்சிப் படமாக்க வந்த இங்கிலாந்திலுள்ள மால்க்கம் மகரிட்ஜ் என்ற பெரியார். செய்திப் படங்கள் தயாரிப்பதில் இவர் சிறந்த புகழ் பெற்றவர். அன்னை தன் நிறுவனத்தைப் படம் எடுப்பதையே முதலில் விரும்பவில்லை ஆயினும், 'இந்தப் படக்காட்சிகளினால் மக்கள் கடவுளை மேலதிகமாக நேசிக்கத் தூண்டப்படுவார்களானால், படம் எடுப்பதைப் பற்றி எனக்குத்தடையில்லை' என்று அனுமதி வழங்கினார்.

படப்பிடிப்புக்கு ஐந்து நாட்கள் தான் குறிக்கப்பட்டிருந்தன. அந்நாட்களில் கல்கத்தாவில் பெரும் ஹர்த்தால் நடந்து கொண்டிருந்தது. ஆகவே. மற்றப் பகுதிகளைப் படம் பிடித்த பின்னர், மரணத் தறுவாயில் படுத்திருப்போரின அறைக்கு வந்தனர், மகரிட்ஜ் அவர்களும் அவருடன் வந்தோரும். அந்த அறையின் யன்னல்கள் யாவும் உயரத்தில் இருந்தன, போதியளவு ஒளியில்லை, அங்கு ஒரே ஒரு விளக்கு மட்டுமேயிருந்தது வேறு விளக்குகள் அங்கு கொண்டு வரக் கூடாது என்பதே அன்னையின் விருப்பம். படம் பிடிப்போர், 'இந்த சூழலில் படம் பிடிப்பது கஷ்டம் உருவங்கள் ஒன்றும் தெரியாமலிருக்கும், எவ்வித பயனுமில்லை' என்றனர். அதற்கு மால்க்காம் மகரிட்ஜ் அப்படப்பிடிப்பாளரை நோக்கி, 'வருவது வரட்டும், எப்படியாவது படத்தை எடு' என்றார்.

அற்புதம் நிகழ்ந்தது; படச்சுருள் தயாராகி வந்தபோது, அந்த அறையில் அழகியதொரு பசுமையான ஒளி பரவியிருப்பதைக் கண்டனர். படப் பிடிப்பாளர் கென், இதை நம்ப மறுத்தார். இதோடு சேர்ந்த வேறொரு சுருளைக் கொண்டு, வேறு பல விடயங்களில், இதே போன்ற மங்கலற்ற ஒளியில் படங்கள் எடுத்துப்பார்த்தார். உருவங்கள் தெரியாத இருள்மயமாயிருந்தது. 'என்ன ஆச்சரியம்! இந்த அறையில் மட்டும் இந்த ஒளி எங்கிருந்து வந்தது? என்றார் படப்பிடிப்பாளர் கென்- ஆனால், மால்க்கம் மகரிட்ஜ் சொன்னார். ''இது தெய்வீக ஒளி. 'காரிருள் கவர்ந்து வருகையில் அன்பின் ஒளி காட்டி என்னை நடத்தும்' என்னும் அற்புதப் பாடலுக்கு இது ஒரு விளக்கம் என்றார்.

'மரணப் படுக்கையிலிருபோர் கூடத்தில் அன்பு நிரம்பி வழிகிறது, இந்த அன்புக்கு இருளில் ஒளிதரும் தன்மையிருக்கிறது. இருளின் ஊடே ஒளிரும் இந்த ஒளி, திரைப் படச் சுருளில் பதிவானது. இயற்கைக்கு மாறானது அன்று. எல்லை கடந்த தெய்வீகத்தை இயற்கை தொடும்பொழுது, அது தெய்வீக அற்புதமாக மிளிர்கிறது. எல்லை விரிந்து பரந்து நிற்கும் தெய்வீக அன்பைக் கண்களால் காணத்தக்க இந்தப் பசுமையான ஒளி படச் சுருளில் பதிவாகி இருக்கிறது! இறைவனுடைய படைப்பில் ஊடாடும் உண்மைத்தத்துவத்தை வெளிப்படையாகக் காணச் செய்வதே அற்புதம் எனப்படும். படச்சுருளில் பதிவான இந்த அற்புதத்தைப் பற்றி எனக்கு ஐயம் ஏதுமில்லை' என்றார் மால்க்காம் மகரிட்ஜ்.

அன்னை தெரேசா பற்றி மால்க்காம் மகரிட்ஜ் எழுதிய ''Something Beautiful for God'' என்ற நூலிலிருந்து மேற்கூறிய பகுதி எடுக்கப்பட்டது.

## இலங்கை தூதரக அதிகாரிகள் சிலர் வெளிநாடுகளில் தஞ்சம்

பல நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களைச் சேர்ந்த சிங்கள முஸ்லிம் அதிகாரிகள் பலர் -அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலேயே அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் என 'ஈழநாடு' அறிவித்துளது இவர்களின் பலர் இலங்கை வரமறுத்துள்ளனர்.

### தாரகை ஒளி

"நேர்மையாக நடப்பவர்களே உலகில் வாழ்வார்கள்;
நாணயமுள்ளவர்களே அதில் நிலைத்திருப்பார்கள்''

— நீதிமொழிகள், 2:21

## எங்கள் கருத்து

### போர் நிறுத்தம்?

நமது நாட்டில், ஜனனாயகம் என்ற போர்வையில் இராணுவ ஆட்சி 1977 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நீடித்து, ஐக்கிய தேசிய கட்சி அரசை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறார்கள். முன்னால் ஜனாதிபதி திரு. ஜயவர்த்னாவின் இராஜரீக இராணுவ ஆட்சியினாலும், இன்றைய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் பௌத்த காருண்ய இராணுவ ஆட்சியினாலும், தமிழ் மக்கள் அடைந்து வந்த துன்பங்களுக்கும், விட்ட கண்ணீருக்கும் ஒரு முடிவில்லை! இதனை நினைந்து ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் - இந்தப் போர் நிறுத்த அறிவிப்பும், இதனைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் உடன்பட்ட செய்தியும், மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை அளித்துளது.

இருந்தும், கடந்த கசப்பான அனுபவங்களை நினைக்கும்போதும், போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்பும், அரசுப் படைகள் எடுத்து வரும் வன்செயல்களைப் பற்றி அறியும் போதும், இதில் முழு நம்பிக்கை வைக்க முடியவில்லை. கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழர் பிரச்சனையைத் தீர்க்கக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் பல! அரசினால் கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் பல! இனப் பிரச்சனையைத் தீர்க்க பாரளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அமுலாக்கப்படாத சட்டங்கள் பல! அரங்கேற்றப்பட்ட இனக்கலவரங்கள் பல !- ஆம், ஸ்ரீலங்கா அரசைத் தமிழினம் நம்பி ஏமாந்த கண்ணீர்க் கதைகள் ஏராளம்! 'நம்பகத் தன்மை' க்கு இங்கு இடமில்லையா என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது!

சகல நிறைவேற்று அதிகாரங்களைப் பெற்றுள்ள மாண்புமிக்க நமது ஜனாதிபதி, நாட்டின் நலனைக் கருதி - தமிழரும் இந்நாட்டு மக்கள், அவர்களும் தம்பிறப்புரிமைகளைப் பெற்றுத் தன்மானத்துடன் இந்நாட்டில் வாழ வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் திட்டமான ஒரு தீர்வை முன்வைத்தால், பாராளுமன்றம் அதனை ஏற்கும் என்பதில் ஐயமில்லை! பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் அவரது கட்சிக்குத் தானே உளது! ஆகவே, மீண்டும் மீண்டும் சர்வகட்சி மாநாடுகளைக் கூட்டிக் காலம் தாழ்த்துவதில் பயனுண்டோ? இந்தப் பிரச்சனையை உண்மையாகத் தீர்க்க வேண்டும், இராணுவத் தீர்விலும் பார்க்க அரசியல் தீர்வு தான் உகந்தது என்ற நோக்கமும் இதய சுத்தியுமிருப்போர் காலந்தாழ்த்த மாட்டார்கள். உண்மையான நிலையில் இப்பிரச்சனையை அணுகி, இதய பூர்வமாகச் சமாதான முயற்சிகளை முன்வைத்தால், பிரச்சனை தீரும் வழி நிச்சயமாகப் பிறக்கும்!

இன்றைய நிலைமை சிக்கலானதாகவே உளது! தமிழரின் விடுதலைப் போராளிகளும், அரசாங்கமும் ஒருவரை ஒருவர் சந்தேகித்து வருகின்றனர். 'வலுவான கோலைக் கையில் தாங்கி இதமாகப் பேசு' என்ற அரசியல் முதுமொழிக்கிசைய, தமிழ் விடுதலைப் போராளிகள் தமது உறுதியான பெலனை நன்கு நிரூபித்துக் காட்டியபின், அதே வலுவான நிலையில் போர் நிறுத்தத்தை முன்வைத்துள்ளனர். அரசாங்கம் இதனை நம்பாமல் தடுமாறுகிறது. சந்தேகம், சபலம் என்பது எவரையும் உள்ளிருந்தே கொல்லும் வியாதி, ஆகவே, தமிழ்ப் போராளிகளின் பெருந்தன்மையை மதித்து, அரசாங்கம் மேலும் காலந்தாழ்த்தாது, இதய சுத்தியுடன், போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து பேச்சு வார்த்தையைத் தொடங்குமென நம்புகிறோம். இராணுவத் தீர்வை நாடுவதிலும் பார்க்க அரசியல் தீர்வு எடுப்பது எல்லாருக்கும் நல்லது! இந்நாட்டுக்கும் நல்லது!!

### சிந்தனைக்கு விருந்து!
### உலக அழிவு நெருங்கி வருகிறது

நாம் வாழும் இவ்வுலகம் ஒரு நாளைக்கு அழியும் என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதைப் பற்றிக் கிறிஸ்தவ திருமறையும், வேறு சில சமய வேதங்களும் கூறியுள்ளன. ஆனால் எப்போ? இதனை தெளிவாகக் கூற முடியாது! அதற்குரிய அறிகுறிகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். 'சயன்ஸ்டைஜெஸ்ட்' என்ற சஞ்சிகையில் இச்செய்தி ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'பயனீர்' என்ற விண்வெளிக் கலம் வெள்ளிக் கோளைம் பற்றி ஆய்வுகள் நடத்தி வந்ததைப் பற்றி அறிவிக்கப்பட்டுளது. இந்த ஆய்வினால் கிடைத்த தகவலின்படி அமில மழையில் நனையும் வெள்ளிக் கோளினால் உலகம் என்றோ ஒரு நாள் அழியுமெனக் குறிக்கப்பட்டுள்ளது. சூரியனில் அணு ஆற்றல் முடிந்துவிடத் தொடங்கும் போது, அது தனது தற்போதைய அளவைவிட, பன்மடங்கு பெருக்கமடையுமாம். இது நடைபெறும் போது, பூமியில் வெப்பநிலை அதிக அளவு உயர்வடையும். அதனல் கடல்கள் கொதித்து, வளிமண்டலத்தை கொடிய நீராவிமேக உறையாக மாற்றமடையச் செய்யும். பூமியின் வெப்பநிலை, 'ஆயிரம் டிகிரி பரனைட்' டுக்கு உயர்வடையும் என்று கூறப்படுகிறது.

மேலும், சுண்ணாம்பு கற்களினாலும், பளிங்கிலும் உள்ள 'கார்பன்டை ஒக்சைட்' வாய்வு முற்றிலும் வெப்பத்தினால் ஏராளமான வாயுவாக மாறும்போது, மூச்சுத்திணறி மக்களனைவரும் அழிவார்களெனக் கூறப்படுகிறது. இப்பிரபஞ்சம் அனைத்திற்கும் ஆண்டவனாயிருந்து ஆட்ச்சிபுரிந்து வரும் எல்லாம் வல்ல கடவுள், நமக்கு நல்ல உலகத்தைத் தந்தார். ஆனால் மனிதன் தனது அக்கிரமச் செயல்களால், இந்நல்ல உலகைச் சீர்குலைத்து, மனுக்குலம் மட்டுமல்ல, உயிரினங்களனைத்தும் வாழத் தகுதியற்ற உலகம் ஆக்கிவிட்டான்.

புதிய வானம், புதிய பூமி - ஆம் புதிய உலகம் படைக்கப்படும் காலம் நெருங்கிவருகிறது. ஆகவே' விழிப்புடன் செபியுங்கள். கடவுள் இவ்வுலகில் அன்புகூர்ந்து தமது மைந்தன் இயேசுபிரானை அனுப்பினார் எம்பெருமானின் இரண்டாம் வருவருகையில், அவர் நியாயதிபதியாக வரும் போது, ராஜதி ராஜாவாக வரும்போது, பழையன கழிந்து புதியது தோன்றுவது அவசியம் அல்லவா?

### கிழத்தனம்!

கிழத்தனம் என்பது முதுமைப் பருவமாகும், முதுமை வந்து விட்டால் - அச்சம், அவநம்பிக்கை, அயர்வு, நடுக்கம், மறதி, முன்கோபம், வெறுப்பு ஆகியனவும் சேர்ந்து வந்துவிடும். இந்த உண்மையை உணர்ந்து அறிஞர்கள் இளமையிலேயே தம் வாழ்க்கையைச் செம்மையாக நடத்தும் முறையை அறிந்து கொண்டு, அம்முறைப்படி வாழ்ந்து பழகி விடுவதால், அவ்வறிஞர்கள் வயதால் முதிர்ந்தவராயினும், முதுமைக்குரிய தீய குணங்கள் அவர்களைப் பீடிக்க மாட்டா.

### திரு. நாகம்மா கார்த்திகேசு
— நன்றி வழிபாடு

ஜனவரி 6-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணியளவில், நெடுந்தீவுத் தென்இந்தியத் திருச்சபையின் அங்கத்தவராக இருந்து காலம் சென்ற திருமதி நாகம்மா கார்த்திகேசுவின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் வழிபாடு, நெடுந்தீவில் உள்ள அன்னாரின் மகள் திருமதி சரோஜினி திருநாவுக்கரசுவின் இல்லத்தில் ஊழியன் திரு. T. H. வசந்தகுமாரினால் நடத்தப்பட்டது. காலம் சென்றவரின் குடும்ப நண்பனான திரு. S. இரத்தினவேல் அவர்களும், நெடுந்தீவு மகா வித்தியாலய பிரதி அதிபர் திரு. K. W. அரியநாயகமும் திருமதி நாகம்மாவின் வாழ்க்கைச் சிறப்புகள் பற்றி எடுத்துக் கூறினர். அவர்களது உரையில் காலம் சென்றவரின் மகனும் தற்போது சவுதி அரேபியாவில் பொறியியலாளராகப் பணிபுரிவருமான திரு. கார்த்திகேசு யோகேந்திரன் தாயாரைப் போலவே மக்களுக்குத் தாராளமாக உதவும் சிந்தை உடையவரென்றும் அதே எண்ணத்தில் நூற்றுக்குமதிகமான நெடுந்தீவு மக்களுக்குச் சவுதி அரேபியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்றும் குறிப்பிட்டனர். திருமதி கார்த்திகேசு போலவே அன்னாரின் பிள்ளைகளும் நெடுந்தீவுத் திருச்சபையின் பணிகளுக்குப் பெரிதும் ஆதரவு அளித்து வருகின்றனர் என்பது குறிப்பீடத்தக்கது.

இந் நன்றி வழிபாட்டில் கலந்து கொண்ட பேராயர் D. J. அம்பலவாணர் அவர்களின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் வழிபாடு முடிவடைந்தது.

### என் மீட்பர் உயிரோடு இருக்கையிலே......

சில வாரங்களுக்கு முன்னர் இந்திய சுங்கத்திணைக்கள உத்தியோகஸ்தர் சிலர் பாக்கு நீரிணையில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் திசைமாறி இலங்கையின் தீவொன்றில் கரை ஒதுங்கியதையும் பின்னர் அங்கு சில நாட்கள் தங்கியபின் அவர்கள் மீண்டும் இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்பதையும் எமது வாசகர்கள் வேறு உள்ளூர் தினசரிகள் மூலம் அறிந்திருப்பீர்கள். இந்திய சுங்கத்தினர் ஒதுங்கிய தீவு நெடுந்தீவேயாகும். இதில் ஆச்சரியம் என்னவென்றால் கரை ஒதுங்கிய குழுவில் ஓர் உத்தியோகத்தரான இந்தியாவில் தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த திரு. எட்வின் தான் கரை ஒதுங்கிய தீவிலும் ஓர் தென்னிந்தியத் திருச்சபை உண்டென்று கண்டு வியப்படைந்ததே. அவருக்கு மேலும் வியப்பூட்டிய சம்பவம், யாழ். தென்னிந்தியத் திருச்சபை பாடல் புத்தகத்தில் அவரது பேரனாரான அருட்திரு. ஞா. சாமுவேல் இயற்றிய பாடல்கள் சில இருந்ததும் அதனை ஆராதனையில் பாடி வருவதுமாகும். நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை ஊழியன் T. H. வசந்தகுமாருடன் அவர் உரையாடிய போது ''என் மீட்பர். உயிரோடிருக்கையிலே எனக்கென்ன குறைவுண்டு நீ சொல் மகனே

........................................

கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார் கடைசிமட்டும் கைவிடாதிருப்பார்'' என்ற தன் பேரனாரின் பாடல் (கீர்த்தனை 132) தன் விடயத்தில் மிகவும் உண்மையென்பதை உணந்திருப்பதாகக் கண்ணீர் மல்கக் கூறினாராம்.

# ONE CHURCH ONE WORLD

Christians throughout the world will be observing the Octave of Prayer for Christion Unity from the 18th to the 25th of January. It is a time of prayer specially seeking for God's guidance and blessings on the numerous efforts that are being undertaken both at national and global levels to recover or manifest more concretely the unity that Christ willed for his church. The churches' prayers are a sharing in the prayer of our Lord himself, " May they all be one; as you, Father, are in me, and I in you, so also may they be in us, that the world may believe that you sent me" (John 17:21 REB). This prayer of Jesus was chosen by the World Student Christian Federation as its Motto — Ut Omnes Unum Sint — " May they all be one." Through the W. S. C. F it has also become the unofficial motto of the modern ecumenical movement.

When the Church of South India came into being in 1947 as the first example of Episcopal and Non — Episcopal Churches uniting to form one Church, the event was, heralded as a possible way forward for churches throughout the world. The hopes have not been entirely disappointing. Similarly, unions took place in other parts of the Indian Sub — continent with the formation of the Church of North India, the Church of Pakistan and the Church of Bangladesh. Sri Lanka is the sad exception where after the failure of union early in the Seventies the movement for Union has lost momentum.

The C. S. I. was inaugurated in the very year that India became independent in 1947 and this was not an accidental coincidence. When the national movement for independence gained ground in India, India's church leaders began to ask themselves the question about the future of the church in their country. They asked radical questions about the nature of the church and its mission. Finally they had to ask themselves whether as Anglicans, Methodists, Presbyterians and Congregationalists their task was to remain interesting fossils of these Western denominations in India or to become the Church in India with its roots firmly in the historic tradition but with its trunk and branches reaching out to the entire country and becoming an authentic Indian Church drawing nourishment from the history and culture of its own country. They saw the vision of an authentic Indian Church fulfilling the mission of Christ with relevance to its own context and calling in history. There are those who are quick to point out that this experiment has had some success only in the Indian sub — continent and has not caught on elsewhere. It is true that the C. S. I. — C. N. I. model has not yet been adopted successfully elsewhere, but there is no denying the fact that since 1947 several unions have taken place through — out the world bringing churches into closer unity.

There are those — and quite a few in Sri Lanka - who argue that the unity Christ willed for his church was a spiritual unity and not an organic unity. Those who argue in this way cannot be taking themselves seriously if within their own denomination some pastors and congregations decide to act in their own ways pleading that they believed only in a spiritual union and that matters of organisations and constitutions did not trouble them. What is constitutive for the nature of one's own denomination and its own unity surely holds true for the nature of a united church. "As you, Father, are in me, and I in you", gives a trinitarian ground for the church's unity and therefore also an incarnational ground. The church which is the one Body of Christ is the Body of the Word become flesh and talk of unity that does not concern itself with "enfleshment" can only be hollow and irrelevant.

As we look around the world situation full of racial conflicts, civil strifes, the crisis in the Persian Gulf and the threat to World Peace itself, the churches which claim to follow "the Prince of Peace" are challenged to look at themselves again and ask themselves the question whether their divisions in the spirit of "more the merrier" are serving the cause of unity among nations and of world Peace or contributing to the conflicts themselves. The fathers of the Church Union movement argued that Christians who have not tasted the fruits of reconciliation within their own relationships cannot proclaim that "God was in Christ reconciling the world unto himself". The call of Christ is again clear today, to break down the barriers that separate us that the world may be one.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Misson Press, 182.1st, Cross Street Jaffna, on Friday, the 11th of January. 1991 and published by The Rev. G. D. ANANDARAJAN, 182. First Cross Street, Jaffna.

## THE NEW .........

(continued from page 1)

Dr Carey has also demonstrated his conviction that the Church's mission must also include social and political involvement.

This does not mean plunging into party politics, but neither dose it mean being blind to the moral implications of social and political policies from whatever quarter they originate. He is a firm believer in the Church's duty to defend the poor, the deprived, the homeless and other disadvantaged, and a recent letter to *The Times* (London) criticizing the effects of the controversial poll tax on the poorer sections of society demonstrated his own courage and independence of maind.

He is not looking for trouble —his ideal is 'a rich and creative dialogue between Church and State' - but he will be nobody's pushover. It is perhaps significant that among the churchmen he most admires is Archbishop Desmond Tutu.

As to his personal qualities there is a quite remarkable unanimity among his fellow - bishops, his diocesan officials, his church - workers, collegues and friends. All agree that he is thoroughly likeable, approachable and easy to get on with as well as decisive and business —like. It is also agreed that he is a natural leader and born teacher, able to communicate clearly and effectively, at every level from the simplest to the most sophisticated. A friend said of him 'He has a very clear mind and he always lets you know precisely what he thinks.' And here again he is a rarity among bishops in neither courting nor fearing the media.

In his private life he is very much a family man, devoted to his wife, Eileen, their two sons and two daughters. His relaxations are simple and unpretentious - walking, jogging, reading, the theatre and cinema.

For once it is not a cliche to speak of 'a man of the people' and this is highly relevant to his own expressed ambition for the Church of England. That is to break the image of the Church as the preserve of the middle classes and to bring back into the fold 'the kind of people I grew up among'

There he undoubtedly touches a nerve.

In recent years the British media have engaged in much harsh criticism of the Church of England, to the point of announcing its terminal decline. Much of that criticism has been superficial, out of date, or just plain malicious. There is in fact plenty of evidence, even to the eye of an outsider, that to its legendary strength in learning and scholarship, there has been added over the past 30 years or so a new depth of spirituality and much striking pastoral vitality.

It is, however, true that the Church of England has been less successful than the Roman Catholic and Free Churches in attracting the loyalty and commitment of working- class people. The image of the Church which has lost the common touch dies hard. If, able to speak as one of their own, the new Archbishop can indeed persuade these lost legions that the church really is for them, that it welcomes them and is relevant to their lives, he will effect nothing short of revolution in the religious life of the nation. It is a large ambition but his qualities hold out more than a hint of promise of success.

He succeeds a man whom future historians will almost certainly recognize as a great Archbishop. And he begins with the heartfelt good will not only of his fellow Anglicans world —wide but of fellow Christians of all persuasions.

*By Courtesy Auglican Information*

## MEMORIAL SERVICE AT DELFT

A service in memory of the late Mrs. Nagammah Karthigesu was held on Sunday the 6th at 6.30 p. m. at the home of her daughter Mrs. Sarojini Thirunavukkarasu. Mr. S. Ratnavel, a friend of the family and Mr. K. W. Arianayagam, Deputy Principal of the Delft Maha Vidyalayam spoke in appreciation of the life and witness of Mrs. Karthigesu. They mentioned that her son K. Yogendran, an engineer in Saudi Arabia, in the spirit of his generous mother was responsible for finding work for hundreds of young people from Delft in Saudi Arabia. The children have been like the mother ardent supporters of the Church. The Bishop who was also present closed the Service with prayer and blessing.

## AN INTERESTING EPISODE AT DELFT

As it was reported in the local papers, a group of Customs Officers of the Indian Government during their operations at sea were carried away by the wind and landed in Delft not knowing their where abouts. They were held there for a few days before being released and allowed to return to India. One of the officers Mr. Edwin was pleasantly surprised to discover a church of C.S.I. of which he was also a member. He was happy to visit the Pastor Mr. T. H. Vasanthakumar and family and the Church and incidentally mentioned that he was delighted to see quite a few lyrics composed by his grandfather The Rev. G. Samuel of Tharangampadi, in our Church hymn book.